**தலைப்பு – 121 – பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்தியில் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் |
| 254 | பதிவாளர் நாயகம் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு

இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| ---------- | -------------------------------------------- | -------------------------------------------- |
| 121 | பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 2015.08.04 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 2015.07.20 |
| 254 | பதிவாளர் நாயகம் திணைக்களம் | 2015.07.14 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 149,477 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 147,956 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களங்களினது தேறிய நிதி

ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 31 மில்லியன் முதல் ரூபா 1,411 மில்லியன் வரையிலான வீச்சில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 0.96 சதவீதம் முதல் 6.82 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடுகள் | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 121 | 1,159 | 1,080 | 79 | 6.82 |
| 253 | 147,224 | 145,813 | 1,411 | 0.96 |
| 254 | 1,094 | 1,063 | 31 | 2.83 |
| மொத்தம் | **149,477** | **147,956** | **1,521** | |

**2.2 வருமானக் கணக்குகள்**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களினால் 2014 ஆம் ஆண்டின் போது 05 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 20,338.28 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 16,203.41 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் படி மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 78.01 சதவீதம் முதல் 135.7 சதவீதம் வரையிலான வீச்சில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக மிகை/ (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை/ (பற்றாக்குறை) | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 10.03.07.99 | 118.28 | 160.51 | 42.23 | 35.70 |
| 20.04.02.00 | 7,000.00 | 5,557.25 | (1,442.75) | (20.61) |
| 20.04.01.00 | 12,000.00 | 9,361.64 | (2,638.36) | (21.99) |
| 10.03.08.00 | 20.00 | 17.59 | (2.41) | (12.05) |
| 10.03.07.02 | 1,200.00 | 1,106.42 | (93.58) | (07.80) |
| மொத்தம் | **20,338.28** | **16,203.41** | **(4,134.87)** | |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 12101 | 31.0 | 24.1 | 15.5 | 15.9 | 110.0 | 74.1 |
| 25301 | 32.0 | 32.0 | 17.0 | 20.81 | 125.0 | 97.5 |
| 25401 | 65.0 | 42.1 | 39.0 | 40.67 | 220.0 | 159.3 |

## 2.4. கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள ஓய்வூதியத் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 33.31 மில்லியன் தொகையாகும்.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12.81 மில்லியன் ஆக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **அமைச்சு/ திணைக்களம்** | **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** |
| பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 6000/0000/000/0015/0034/000 | 4.05 |
| ஓய்வூதியத் திணைக்களம் | 6000/0000/000/0015/0133/000 | 8.50 |
| பதிவாளர் நாயகம் திணைக்களம் | 6000/0000/000/0015/0134/000 | 0.26 |
| **மொத்தம்** | | **12.81** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அமைச்சினதும் திணைக்களங்களினதும் ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 5 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 121 – பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய 05/2013 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தேவையான கட்டுநிதி எல்லைகள் குறிப்பிடப்பட்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ் எல்லைகள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லைகளின் பிரகாரம் அந்தந்த மாதங்களில் எதிர்பார்த்தன் பிரகாரம் கட்டுநிதிகள் அமைச்சிற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் 4 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக கட்டுநிதி கிடைக்காமையால் மொத்தம் ரூபா 25,903,800 அல்லது மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 0.83 சதவீதத்தலிருந்து 49.44 சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,630,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

### 3.2 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 05 பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 132,610 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட

வேண்டிய போதிலும் 20 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 377,000 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் செயற்பாடுகள் முடிவடைந்து 01 மாதம் முதல் 02 மாதம் வரையான கால தாமதத்தின் பின்னர் அந்த செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் ஒரு பதவிநிலை உத்தியோகத்தருக்கு ஒரு தடவையில் வழங்க முடியுமான ஆகக்கூடிய செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 ஆக இருந்த போதிலும், அந்த பிரமாணங்களுக்கு முரணாக 07 சந்தர்ப்பங்களின் போது 04 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 இனை விஞ்சி ரூபா 167,485 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 3.3 பொது வைப்புக் கணக்குகள்

---

அமைச்சினால் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 99,205 கூட்டுத்தொகையான 12 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 வருமானக் கணக்குகள்

---

அமைச்சின் செயலாளருக்கு வருமானக் குறியீட்டின், வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அவ்வருமானக் குறியீட்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 10.03.07.99 ஆம் இலக்க அனுமதிப்பத்திரக் கட்டணம் - ஏனையவை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டுக்குரிய ரூபா 118 மில்லியன் வருமானம் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 160.5 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 136 சதவீதமாக இருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது 05 மாவட்ட செயலகங்களினால் உழைக்கப்பட்ட வருமானம் குறைவடைந்திருந்ததுடன் அதில் வவுனியா, மன்னார், ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களின் வருமானம் குறைவடைதல் முறையே 31 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தன.

### 3.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 1,021,271 ஆக இருந்தது.

### 3.6 இணக்கமின்மைகள்

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (i) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| • நிதிப் பிரமாணம் 625(1) | 11,401,730 | G-LED செயற்திட்டத்தின் 2013/2014 ஆம் ஆண்டிற்காக கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா 11,401,730 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பொருட் பதிவேடு ஒன்றிலோ அல்லது பதிவேடொன்றிலோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| | • நிதிப் பிரமாணம் 1646 | 11,401,730 | • G-LED செயற்திட்டத்தின் சொத்துக்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>• அமைச்சிடமிருந்த 64 வாகனங்களில் 27 குழாம் வாகனங்களுக்குரிய அனைத்து ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றல் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>• மேலும் 08 குழாம் வாகனங்களில் 05 இற்குரிய 05 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான காலப்பகுதியின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை<br>------------------------------------------<br>2010 மே 14 ஆந் திகதிய CA/1/171 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்கள் ஆகக்கூடியது 03 வழங்கப்பட வேண்டிய போதிலும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்களின் கௌரவ |

| | | |
|---|---|---|
| | | அமைச்சரின் பாவனைக்காக 05 உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| **(iii)** | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை**<br>--------------------------------------------<br>1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 மற்றும் 03 ஆம் பந்திகள் | அமைச்சிற்குச் சொந்தமான 07 குழாம் வாகனங்களுக்காக அரச இலட்சினை மற்றும் நிறுவகத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கவில்லை |
| **(iv)** | **தேசிய பாதீட்டு சுற்றறிக்கை**<br>--------------------------------------------<br>2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் இடமாற்றலாகி வந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து கையேற்கப்பட்ட கடன் மீதிகள் சுற்றறிக்கையில் குறிப்பிட்ட கால எல்லையை கடந்திருந்த போதிலும் அக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு அலுவலகம் தவறியிருந்தது. |

**(இ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

---------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காத வகையில் செயற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்கு விடுவிக்கப்பட்ட நிதி போதியளவில் இல்லாதிருந்தமை காரணமாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தினால் (UNDP) நல்லாளுகைக்கான பிரதேச பொருளாதார அபிவிருத்தி (G-LED) தொடர்பான செயற்திட்டத்திற்காக மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 8,325,000

தொகை நேரடிக் கொடுப்பனவாக (Direct Payment) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தினால் (UNDP) பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்காக செய்யப்பட்ட மேற்கூறிய கொள்வனவுக்குரிய மொத்தம் ரூபா 2,317,321 ஆன உள்நாட்டு வரித்தொகை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் செலுத்த வேண்டியதாக இருந்தது.

## 3.7 வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள்

-------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் ஒரு செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அதன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25,000,000 கூட்டுத்தொகையாக இருந்ததுடன், அச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 24,464,785 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது, இவ்வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நல்லாளுகைக்கான பிரதேச பொருளாதார அபிவிருத்தி (G-LED) தொடர்பான செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்கான காலம் 53 மாதங்களாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் கடந்த 17 மாத காலப்பகுதியில் செயற்திட்டத்தின் காலஎல்லையில் 32 சதவீதம் மேவுகை செய்யப்பட்டிருந்தது. அக்காலப்பகுதிக்காக செயற்திட்டத்தின் உள்ளபடியான கிரயத்தில் 1.93 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நல்லாளுகைக்கான பிரதேச பொருளாதார அபிவிருத்தி (G-LED) தொடர்பான செயற்திட்டத்தின் முகாமைத்துவ அலகு உத்தியோகத்தர்களுக்காக சம்பளக் கொடுப்பனவிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2015 மார்ச் 12 ஆந் திகதி கிடைத்திருந்தது. உரிய அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,701,762 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தன.

(இ) நல்லாளுகைக்கான பிரதேச பொருளாதார அபிவிருத்தி (G-LED) தொடர்பான செயற்திட்டத்தின் முகாமைத்துவ அலகு உத்தியோகத்தர்களுக்காக அங்கீகரிக்கப்படாத 03 பதவிகளுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையை விஞ்சி 04 பதவிகளுக்காகவும் மொத்தம் ரூபா 158,601 தொகை சம்பளங்களாக செலுத்தப்பட்டிருந்தன.

**3.8 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்ட அமுல்படுத்தல்**

-------------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) 2006 ஆம் ஆண்டின் போது 1,452 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக கெப்பட்டிபொல மாவத்தை - உத்தேச வீடமைப்புத் தொகுதி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2010 மற்றும் 2011 ஆகிய இரண்டு வருடங்களில் நகர அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் மற்றும் கட்டிடத் திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கு ரூபா 5,019,262 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) கண்டி குண்டசாலையில் 696 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,728,828,261 தொகையான மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் 2010 ஆகஸ்ட் மாதத்தின் போது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.9 செயலாற்றல்**

-----------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் E-Citizen நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டிற்கான

இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக 2015 சனவரி 30 ஆந் திகதியில் உள்ளவாறு செயன்முன்னேற்றம் தொடர்பான அறிக்கையொன்று 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகு தவறியிருந்தது.

## 3.10 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

2010 சனவரி 07 ஆந் திகதி அமைச்சின் வாகனம் விபத்திற்குட்பட்டமையால் ரூபா 511,392 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. 2015 யூன் 19 ஆந் திகதி வரையிலும் அந்நட்டம் அமைச்சினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.11 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக அமைச்சினால் சரிசெய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | தொடர்புடைய விடயம் | குழுவின் சிபாரிசு | செயலாளரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாளிகாவத்தை செயலக அலுவலகச் சுற்றாடலில் கட்டிடங்களிலிருந்து ரூபா 246 மில்லியன் வீட்டு வாடகை அறவிடப்படாமை. | உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வாடகையை விரைவாக அறவிட்டுக் கொள்வதற்கும் பராமரிப்பிற்காக அந்த நிறுவனத்திற்கே கட்டிடங்களை கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2013 திசெம்பர் மாதம் வரையிலும் காணப்பட்ட நிலுவை வாடகை ரூபா 246.6 மில்லியனாக இருந்ததுடன் 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 167.8 மில்லியன் அமைச்சுச் செயலாளரினால் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) | அக்ரஹார காப்புறுதித் திட்டத்தை திருத்துவதன் கீழ் கடன் சேமிப்பு காப்புறுதிப் பூட்கைகளை பிணையாக வைத்து கடன் பெற்ற உத்தியோகத்தரொருவர் சேவையிலிருந்து விலகிச் செல்லும் போது | கடனைச் செலுத்தாமல் தவிர்ப்புச் செய்யும் உத்தியோகத்தர்களுக்குரிய கடன் பணத்தை அக்ரஹார காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடுவதற்குத் | அக்ரஹார காப்புறுதிக்காக பிணையாக வைக்கப்பட்ட கடன் பணம், உத்தியோகத்தரொருவர் சேவையை விட்டுச் செல்லும் போது அல்லது சேவையிலிருந்து நீக்கப்படும் போது |

| | | |
|---|---|---|
| அல்லது சேவையிலிருந்து விலக்குகின்ற போது காப்புறுதிப் பூட்கையின் கீழ் காப்புறுதிப் மேவுகை பெற்றுக்கொள்ள முடியாமை | தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடுமாறு வழங்கப்பட்ட கட்டளை | அக்ரஹார காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக 2015 யூலை 15 ஆந் திகதி அளவில் சுற்றறிக்கையொன்றை விநியோகிப்பதற்கான திருத்த வரைவொன்று தயாரிக்கப்பட்டு பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. |

## 3.12 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

------------------------------------------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 74 | 72 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 12 | 06 |
| (iii) | இரண்டாம் நிலை | 552 | 433 | 119 |
| (iv) | ஆரம்ப நிலை | 234 | 201 | 33 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | மொத்தம் | 879 | 719 | 160 |

## 4. தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பராமரிக்காமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891 இன் (i) ஆம் பிரிவு |

### 4.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 18,243,792,888 கூட்டுத்தொகைக்குரிய கொடுக்கல் வாங்கல்களுக்காக வலதுகுறைந்த மற்றும் இறந்த இராணுவ வீரர்களுக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் உரிய 55 வயதினைப் பூர்த்தி செய்யும் திகதிகள், ஓய்வூதிய இலக்கம் அல்லது விதவைகள் மற்றும் தபுதாரர் இலக்கம், ஓய்வூதியம் பெறுகின்ற பிரதேச செயலகம் போன்ற சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அக் கொடுக்கல் வாங்கல்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியால் செலுத்த வேண்டிய மற்றும் திணைக்களத்தின் மூலம் செலுத்தப்பட வேண்டிய ரூபா 637,789,591 கூட்டுத்தொகையான பணிக்கொடை செலுத்தப்பட்டதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

---

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆம் திகதி வரை பதில் அளிக்கப்படாதிருந்ததுடன், அக்கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 35,530,385,660 ஆக இருந்தது.

**4.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

மீளாய்வாண்டின் போது ஓய்வூதிய பணிக்கொடை வங்கி கடன் வசதிகளின் கீழ் கொடுப்பனவு செய்யும் போது அவ்வாறு பெற்றுக்கொண்ட கடனுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 139,262,676 தொகையான வங்கிக் கடன் வட்டி செலவின விடயம் 1601 இன் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் அது ஓய்வூதிய பணிக்கொடை செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**4.4 பொது வைப்புக் கணக்கு**

---

02 வருடங்களை விஞ்சிய ரூபா 167,734 கூட்டுத்தொகையான 4 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 வருமானக் கணக்குகள்**

---

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 2 வருமானக் குறியீடுகளின் கீழ் வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அவ்வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமானக் குறியீட்டு இலக்கம் 20.04.01.00 - சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பணம் (மத்திய அரசாங்கம்)

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 12,000 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 9,362 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 78 சதவீதமாக இருந்தது.

(ii) 2001 சனவரி 15 ஆந் திகதிய 1/2001 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் கணக்குப் பொழிப்புக்களின் மூலம் வருமானக் குறியீட்டிற்குரிய வருமானங்களை கணக்கீடு செய்வதற்கும் வருமாங்களை மீளச் செலுத்துவதை கணக்கீடு செய்ததன் பின்னர் மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் அநேகமான நிறுவனங்கள் அந்த ஏற்பாடுகளின் படி அறிக்கை சமர்ப்பிக்காதிருந்ததுடன் அந்த அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும் திணைக்களத்தினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மத்திய அரசாங்கத்திற்குரிய நிறுவனங்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது சமூக பாதுகாப்பு பங்களிப்புப் பணமாக ரூபா 9,361,637,260 தொகை கிடைத்திருந்தது. மாதாந்த சமூக பாதுகாப்பு பங்களிப்புப் பணப் பெறுவனவுகளின் மாதாந்த விலகல் ரூபா 31,102,666 ஆன மறைப் பெறுமதியிலிருந்து ரூபா 242,826,695 வரையான நேர் பெறுமதியொன்று வரையான வீச்சளவில் அளவில் விலகல் இடம்பெற்றிருந்த போதிலும், அவ்விலகல் தொடர்பாக தாக்கமளித்திருந்த விடயங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டின் போது ரூபா 14,648,483 தொகை வருமானத்திலிருந்து மீளச் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 5,189,747 தொகையான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய நிறுவனங்களிலிருந்து வரவுக் கட்டளை பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்தினால் போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தரின் பங்களிப்புப் பணப் பெறுவனவு தொடர்பான எந்தப் பதிவேடும் விதவைகள் அனாதைகள் அலுவலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. நிலுவை பங்களிப்புப் பணத்தை உரிய நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் வருமானக் கணக்குகளில் நிலுவைப் பங்களிப்புப் பணத்தைப் பதிவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) இலங்கை புகையிரத திணைக்களத்திற்குரிய 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 36 உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த போதிலும், அக்காலப்பகுதிக்காக பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமானக் குறியீட்டு இலக்கம் 20.04.02.00 - சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பணம் (மாகாண சபை)

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 7,000 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 5,557 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 79 சதவீதமாக இருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 128(2)(எ) மற்றும் 2002 யூலை 17 ஆம் திகதிய 1/2002 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் பங்களிப்புத்

தொகை பெறுவனவு பகுப்பாய்வு செய்யப்படக்கூடிய வகையில் ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் மாதாந்தம் கிடைத்த பங்களிப்புத் தொகை தொடர்பான அறிக்கை பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2001 சனவரி 15 ஆந் திகதிய 01/2001 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.2, 2.3 மற்றும் 2.5 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தவறொன்றினால் குறிப்பிடப்பட்ட பணத்திற்கு மேலதிகமாக திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு பணத்தை மீளச் செலுத்துவதற்காக நிதிப் பிரமாணம் 118(2)(அ) இன் பிரகாரம் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது ரூபா 939,629 தொகையான சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பண வருமானத்திலிருந்து மீளச் செலுத்துகையானது விதவைகள், அநாதைகள் அலுவலகத்தின் கணக்காளரினதும் பணிப்பாளரினதும் சான்றுறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் பெறுவனவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அந்நிறுவனங்களிடமிருந்து பெறுவனவுப் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பங்களிப்புப் பணப் பெறுவனவு தொடர்பான எந்தப் பதிவேடும் விதவைகள் அனாதைகள் அலுவலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. நிலுவை பங்களிப்புப் பணத்தை உரிய நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கும் வருமானக் கணக்குகளில் நிலுவைப் பங்களிப்புப் பணத்தைப் பதிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

---

25301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,102,312 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 24 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) நிதிப் பிரமாணம் 506(ஈ) இன் பிரகாரம் தனிநபர் கடன் மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான முழுமையான மீதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியுடன் ரூபா 1,038,118 ஆன வேறுபாடொன்று காணப்பட்ட போதிலும், அது சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரிப் புத்தகங்களுக்கு இடையே ரூபா 4,796 வேறுபாடொன்று பல வருட காலமாக இருந்து வந்த போதிலும், அதனைச் சீராக்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது.

## 4.8 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தினால் தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,074,122,583 ஆகும்.

(ஆ) 2014 ஏப்ரல் மாதம் முதல் ஓய்வூதிய பணிக்கொடை செலுத்துவதற்கு திணைக்களத்தினால் வங்கி கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடன் மீதி ரூபா 10,317,214,752 ஆக இருந்தது. அக்

கடன் மீதி ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| ஓய்வூதியக் நியதிச் சட்டக் கோவையின் 2 மற்றும் 25 ஆவது பிரிவுகள் | 13,462,288 | ஓய்வூதியப் பணிக்கொடை பெற்றுக் கொள்வதற்கு விருப்பைத் தெரிவித்து ஓய்வூதிய பணிக்கொடையைப் பெற்றுக் கொள்ளும் போது பணிக்கொடைத் தொகையில் 60 சதவீதம் அளவில் அரசிற்கு அறவிடப்பட்ட போதிலும், ஓய்வூதியப் பணிக்கொடை பெற்றுக் கொள்வதற்கு விருப்பை தெரிவித்து பணிக்கொடையைப் பெற்றுக் கொண்டிருக்கையில் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளிடமிருந்து அவ்வாறு பணிக்கொடை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவு | | உத்தியோகத்தர் கடன் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் காணப்படும் கடன் மீதியில் மாற்றப்பட்ட ஓய்வூதியத்தில் ஒரே தடவையில் அறவிடுவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளருக்கு |

விருப்பம் தெரிவித்து கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் மாகாண சபை உத்தியோகத்தர்கள் தொடர்பாக கழிப்பனவுகளுடன் மொத்த பணிக்கொடைத் தொகை ஓய்வூதியம் பெறுவோரின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை**

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 447 | - | செலவின பேரேட்டில் பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) ஓய்வூதிய திணைக்களச் சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 2014 யூலை 03 ஆந் திகதிய 7/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | - | சுற்றறிக்கை பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடைத் தொகை ஓய்வூதியக்காரர் சேவை புரிந்த நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லாதிருக்கும் போது ஓய்வூதியம் பெறுவோரின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தது. |

## 4.10 வங்கிக் கணக்குகள் செயற்படுத்தலிலுள்ள குறைபாடுகள்

**வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நீண்ட காலதாமதம்**

01 வங்கிக் கணக்கிற்குரிய 2014 திசெம்பர் மாதத்திற்கான வங்கி கணக்கிணக்கக் கூற்று 2015 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.11 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

---

பற்றுச்சீட்டு (slip) முறைமையின் கீழ் ஓய்வூதியம் செலுத்தும் போது, வங்கியினால் வங்கிக் கணக்கு இலக்கம் மற்றும் குறித்த பணத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியக்காரரின் கணக்கிற்கு பணத்தைச் செலவு வைத்தல், ஓய்வூதிய தரவு முறைமைக்கு தரவுகளை உட்செலுத்தும் அதிகாரம் பிரதேச செயலகங்களின் ஓய்வூதிய உத்தியோகத்தர்களுக்கு கட்டுப்பாட்டு முறைமையொன்று இல்லாமல் கையளித்தமை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் மூலம் போதியளவில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை ஸ்தாபிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காமை போன்ற உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் காரணமாக போலியாக வங்கிக் கணக்குகள் இலக்கம் மாற்றப்பட்டு ஓய்வூதிய மோசடிகள் செய்யப்பட்டிருந்தன. 2014 ஆகஸ்ட் 21 ஆந் திகதி வரையிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ரூபா 30,695,737 தொகையான 12 மோசடிகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தினால் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மோசடிகள் செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.12 நட்டங்களும் சேதங்களும்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) ஒதுக்கீட்டுக் கணக்கின் டிஜீஎஸ்ஏ – 7 கூற்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நட்டங்கள் தொடர்பான கூற்றில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஓய்வூதியம் கூடுதலாக செலுத்தப்பட்டவைகளில் மேலும் அறவிடுவதற்குள்ள நட்டங்களாக ரூபா 188,959,505 தொகை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்குரிய சம்பவங்களின் எண்ணிக்கையாக ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை குறிப்பிடப்படாமல் பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தன.

(ஆ) ஓய்வூதியம் கூடுதலாக செலுத்தப்பட்டமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஓய்வூதியம் பெறுவோரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலதிக் கொடுப்பனவை அறவிடுவதற்கு முன்னர் ஓய்வூதியம் பெறுபவா் அல்லது விதவை மரணிக்கும் வேளையில் அறவிடப்படாத மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கூடிய விதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அவ்வாறான நிலைமைகள் தொடர்பாக பிரதேச செயலகங்களின் மூலம் தகவல்களைக் கோராமல் ஒதுக்கீட்டுக் கணக்கின் டிஜீஎஸ்ஏ (7)(1) புத்தங்களிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் வெற்று அறிக்கையாக ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ஓய்வூதிய மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2014 சனவரி 01 இல் உள்ளவாறு காண்பிக்கப்பட்டிருந்த மீதிகளுக்கிடையே ரூபா 8,078,943 ஆன வேறுபாடொன்று தொடர்பில் காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.13 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) திணைக்கள வளவில் கட்டிடங்களை வாடகைக்கு வழங்குதல் மீதான பரீட்சிப்பு

வாடகை அடிப்படையில் கட்டிடங்களைப் பெற்றுக்கொண்டிருந்த 6 நிறுவனங்களிடமிருந்து 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 18,456,400 தொகையும் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளிற்காக 8 நிறுவகங்களிடமிருந்து ரூபா 61,407,189 தொகையுமாக மொத்தம் ரூபா 79,863,589 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவையாக இருந்தன. அந் நிலுவையை அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வங்கி தானியங்கி ரெலர் இயந்திரங்களுக்கான நிலவாடகை அறவிடப்படாமை**

---

அரச வங்கியொன்றின் தானியங்கி ரெலர் இயந்திரங்களைப் பொருத்துவதற்காக ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்ட இட அளவிற்காக எவ்வித வாடகையொன்றும் திணைக்களத்தினால் உரிய வங்கியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசின் ஆதனங்களில் அலுவலகங்களை நடாத்தி அதற்காக வாடகை பெற்றுக்கொள்ளல்**

---

மாளிகாவத்தை மேற்கு, மாளிகாவத்தை கிழக்கு மற்றும் பஞ்சிக்காவத்தை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளின் மூன்று கிராம சேவையாளர்களினால் மாளிகாவத்தை செயலகத்தின் வளவில் 578 சதுர அடி அளவிலான இடவசதிகள் வாடகைக் கொடுப்பனவின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது. கொழும்பு பிரதேச செயலகத்துடன் இது தொடர்பாக கடித பரிமாற்றல் மூலம் அவ்விடம் வழங்கப்பட்டிருந்தமைக்கான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரச ஆதனமொன்றில் அலுவலகத்தை நடாத்திச் செல்வதால் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளத்துடன் அலுவலக படிகளாக ரூபா 99,750 தொகை 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

**(ஈ) ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் ஒசுசல ஒன்றை ஸ்தாபித்தல்**

---

ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் ஒசுசல ஒன்றை ஸ்தாபிப்பதற்காக ரூபா 20,000 மாத வாடகையில் 325 சதுர அடி அளவிலான கட்டிடமொன்று 2014 நவம்பர் 17 ஆந் திகதி உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி வரையிலும் அங்கு வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டோ அல்லது குறித்த வாடகையைப் பெற்றுக் கொள்வதற்கோ திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலுவை குத்தகைள் மற்றும் வாடகைகள் அறவிடப்படாமை**

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாளிகாவத்த செயலக வளவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தபால் அலுவலகத்திற்காக 2013 ஏப்ரல் 24 ஆந் திகதி வரையில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகை வாடகை ரூபா 8,950,005 ஆக இருந்தது. இது தொடர்பாக தபால் சேவைகள் அமைச்சின் 2014 யூன் 17 ஆந் திகதிய MSP/DEV/33206 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்நிலுவை வாடகைகளை பதிவழிப்பதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2015 சனவரி வரையிலும் அந்நிலுவை வாடகை அறவிடப்பட்டோ அல்லது பதிவழிக்கப்பட்டோ இருக்கவில்லை. 1996 சனவரி 01 ஆந் திகதி மேற்குறித்த இடம் தபால் திணைக்களத்திற்கு தபால் அலுவலகமொன்றைப் பேணிச் செல்வதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் நடாத்திச் செல்லப்படும் 1777 சதுரஅடி அளவிலான சிற்றுண்டிச்சாலைக்காக உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 50,900 ஆக இருந்ததுடன், அதன் பிரகாரம் 12 மாத காலப்பகுதிக்காக ரூபா 319,900 ஆன நிலுவை வாடகையும் அதற்குரிய தண்டப் பணமும் 2015 பெப்ரவரி 12 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வாடகை செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் பிரகாரம் தண்டப்பணத்தை அறவிடுதல் மற்றும் வாடகை தொகையை பிணை வைப்புத் தொகையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) ஓய்வூதிய தரவு முறைமையின் பிரகாரம் செலவினத்தை உறுதிப்படுத்தாமை**

---

ஓய்வூதியங்கள் மற்றும் விதவைகள் தபுதாரர் ஓய்வூதியங்கள் என்பவற்றை செலுத்துவதற்காக மொத்த மீண்டெழும் செலவினத்தில் 80.5 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. 253-1-2-2-1502(21) மற்றும் 253-1-2-1-1502(11) செலவின விடயங்களின் கீழ் ரூபா 135,589,336,224 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், அம்முழுச் செலவினத்தினதும் சரியான தன்மை ஓய்வூதிய தரவு முறைமை மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) ஒன்றுதிரட்டிய கட்டுப்பாட்டுக் கணக்கொன்றைத் தயாரிக்காமை**

---

2011 சனவரி 30 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் 2014 ஏப்ரல் 07 ஆந் திகதிய 01/2011 (திருத்தம் 1) ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் படி பிரதேச செயலகங்களினால் புதிய ஓய்வூதியம் பெறுவோர் சேர்த்துக் கொள்ளப்படல், மரணித்தல் மற்றும் ஓய்வூதியர்களின் கோவைகளை இடம்மாற்றுதல் போன்ற சீராக்கங்களுக்குரிய மாதாந்த கட்டுப்பாட்டுக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டதன் பின்னர் மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவிற்காக கட்டுநிதி கோரப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மாவட்ட செயலகங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கட்டுப்பட்டுக் கணக்குகள் ஒன்றிணைக்கப்பட்டு திணைக்களத்தில் ஒன்றுதிரட்டிய கட்டுப்பாட்டுக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) கடற்படையின் கடற்படை வீரர்களுக்காக சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவிற்காக நிதிஏற்பாடுகளை வழங்கல்**

---

யுத்தத்தின் போது மரணித்த மற்றும் வலது குறைந்த நிலைமைக்குட்பட்ட கடற்படையின் உத்தியோகத்தர்களுக்கு கடற்படை தலைமையகத்தினால் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அந்த உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் ஓய்வூதிய திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) யுத்தத்தின் போது மரணித்த மற்றும் வலது குறைந்த கடற்படை உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் 55 வருட வயதில் ஓய்வுபெறும் திகதி வரை கடற்படையினால் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட வேண்டும். அதன் பிரகாரம் அவர்களுக்கு உரித்தாகும் வாழ்க்கைச் செலவினப் படிகள் கடற்படையால் செலுத்தப்படும் சம்பளம் மற்றும் வேதனங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஓய்வூதியத் திணைக்களத்தினால் அவர்கள் மரணித்த மற்றும் வலது குறைந்த நிலைமைக்குட்பட்ட திகதியிலிருந்து ஓய்வூதியம் செலுத்தப்பட வேண்டும். எனினும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் செலுத்தப்படுகின்ற ஓய்வூதியத்தில் வாழ்க்கைச் செலவின படிகளின் பகுதியொன்றும் உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்த வாழ்க்கைச் செலவின படிகள் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் வலது குறைந்த 36 கடற்படை வீரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ஓய்வூதிய கொடுப்பனவுப் பரிசோதனையின் போது 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் வரை ரூபா 4,391,612 ஆன வாழ்க்கைச் செலவினப் படிகள் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) யுத்தத்தின் கடமையில் ஈடுபட்டிருந்த போது வலது குறைந்த, இறந்த மற்றும் காணாமல் போன கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் தங்கியிருப்போர் வெளிநாடு செல்வதற்கு முன்னர் கடற்படைப் பிரிவிற்கு தெரியப்படுத்துதல் மற்றும் வெளிநாடு சென்றததன் பின்னர் உயிர்வாழ்வுச் சான்றிதழ் உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) உழைக்கும் சக்தி குறைவடையும் சதவீதம் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலைமையின் கீழ் சம்பளம் மற்றும் படிகளுடன் ஓய்வுபெற முடியுமாக இருந்த போதிலும், கடற்படையின் 187 பேரின் உழைக்கும் சக்தி குறைவடையும் சதவீதம் 50 சதவீதத்திற்கு குறைந்த நிலைமையொன்றின் போது சம்பளம்

மற்றும் படிகளுடன் ஓய்வுபெற்றிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களுக்காக ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் சகல நலன்களும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறான வேறுபட்ட நிலைமையொன்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஐ) ஓய்வூதிய பணிக்கொடை வங்கி முறைமை மூலம் செலுத்துதல்**

2014 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய செலுத்த வேண்டிய 17,029 ஓய்வூதிய பணிக்கொடை விண்ணப்பங்கள் திணைக்களத்திற்கு கிடைத்திருந்தன. அவ்விண்ணப்பங்கள் தொடர்பாக முறைப்படி தகவல்களைப் பெற்றுக் கொள்ளாமல் வங்கி முறைமையை பயன்படுத்தி ஓய்வூதியம் பெறுவோருக்கு பணிக்கொடை அந்த ஓய்வூதியம் பெறுவோரின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் பின்வரும் குறைபாடு இடம்பெற்றிருந்தது.

ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து கழித்துக் கொள்ளப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 17 சந்தர்ப்பங்களின் போது ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து கழித்துக் கொள்ளப்பட வேண்டிய மொத்தமாக ரூபா 1,741,175 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.15 மனிதவள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 18 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 01 | 10 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,076 | 874 | 202 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 75 | 50 | 25 | - |
| (v) | ஏனையோர் (அமைய / தற்காலிக / ஒப்பந்த அடிப்படை) | - | 13 | - | 13 |
| | மொத்தம் | 1,185 | 956 | 242 | 13 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அமைய அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்களும் தற்காலிக அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்களுமாக 04 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். 4 சாரதி பதவிகளும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 6 அலுவலக உதவியாளர் பதவிகளும் அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 3 பூங்காகத் தொழிலாளர்களுமாக 13 ஊழியர்கள் மிகையாக இருந்தனர்.

**(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தினால் ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கபடுகின்றன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| பெண் பொலிஸ் சார்ஜன்ட் | 1 | பொலிஸ் திணைக்களம் | 2010 - 2014 |
| பெண் பொலிஸ் சார்ஜன்ட் | 1 | பொலிஸ் திணைக்களம் | 2012 - 2014 |

## 5. தலைப்பு 254 - பதிவாளர் நாயகம் திணைக்களம்

### 5.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| நொத்தாரிஸ் பெயர் பதிவேடு | நொத்தாரிஸ் கைநூலின் 7 ஆம் பிரிவு | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| பதிவுக் கட்டண வருமானக் கணக்கிற்குரிய புத்தகங்கள் | நிதிப் பிரமாணம் 128(2) (ஏ) | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 5.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 24 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமை காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அடுத்து அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டின் 7 சதவீதத்திலிருந்து 76 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்ததுடன் அச்சேமிப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்த பதில்களை ஏற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை.

(ஆ) 03 செலவின விடயங்களிற்குரிய ரூபா 12,000,000 தொகையான நிதிஏற்பாடு முழுவதும் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(இ) ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் நிதிப் பிரமாணம் 66 இன் ஏற்பாடுகளின் படி வேறு விடயங்களுக்கு நிதி ஏற்பாடுகள் மாற்றப்பட்டதன் பின்னரும் 10 சதவீதத்தை விஞ்சிய ரூபா 5,525,584 தொகையான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்த 6 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டிற்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66 மாற்றல்களின் மூலம் மேலதிக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் 03 செலவின விடயங்களில் 10 சதவீதத்தை விஞ்சி ரூபா 3,225,986 தொகையான சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

## 5.3 வருமானக் கணக்குகள்

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 02 வருமானக் குறியீடுகளின் வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீடுகளிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமானக் குறியீட்டு இலக்கம் – 10-03-07-02 - பதிவுக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 1,625 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அம்மதிப்பீடு ரூபா 1,200 மில்லியன் வரை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,106 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானம் திருத்திய வருமானத்தின் 92 சதவீதமாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் பதிவுக் கட்டண வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 6.52 மில்லியன் நிலுவையாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானம் 1 வருடத்திலிருந்து 4 வருடங்கள் வரையான காலவீச்சில் இருந்து வந்திருந்த போதிலும், அந்நிலுவை வருமானத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(iii) நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டின் போது 47 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 32 அலுவலகங்கள் மாத்திரம் நிலுவை வருமான அறிக்கைகளை சமர்ப்பித்திருந்ததுடன் அவ்வறிக்கைகளில் அறவிடுவதற்குள்ள திரட்டிய தொகை மற்றும் ரூபா 5,000 இற்கு குறைந்த நிலுவை வருமானம் தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப் பிரமாணம் 128(1) (ஆ) இன் பிரகாரம் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்கள் தாமதமின்றியும் முழுமையாகவும் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) பதிவுக் கட்டண வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த நிலுவை கட்டணங்களை அறவிடுவது தொடர்பாக அச்செயற்பாடு கையளிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களால் நிதிப் பிரமாணம் 128(1) (ஏ) மற்றும் நிதிப் பிரமாணம் 128(2) (உ) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2014 ஆம் ஆண்டில் ரூபா 31.66 மில்லியன் தொகை வருமானத்திலிருந்து மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 0.13 மில்லியன் கொடுப்பனவிற்காக நிதிப் பிரமாணம் 118(2) (ஆ) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) 2014 ஆம் ஆண்டின் போது வருமானக் கணக்கில் ரூபா 594.59 மில்லியனான பெறுவனவும் ரூபா 31.53 மில்லியனான கொடுப்பனவும் மாவட்ட செயலகங்களில் வருமான சேகரிப்பு மற்றும் மீளக் கொடுப்பனவுகளாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுவனவு கொடுப்பனவு தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்காக

திணைக்களத்தினால் மாவட்ட செயலகங்களிலிருந்து தகவல் முறையாக அறிக்கையிடும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ix) நிதிப் பிரமாணம் 128(2) (எ) பிரகாரம் பதிவுக் கட்டண வருமானச் சேகரிப்பிற்காக முறையான வகையில் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(x) 2012 திசெம்பர் 31 ஆம் திகதிய 9/2012 ஆம் இலக்க பதிவாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் 133 பிரதேச செயலகங்களினால் விவாக, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களின் பிரதிகள் வழங்குதல், உறுதியுரைப் பத்திரங்கள் மற்றும் மொழிபெயர்ப்பிற்கான அறவீடுகள் தொடர்பாகவும் விவாகப் பதிவுகளிற்காகவும் அறவிடப்படும் கட்டணம் தொடர்பான வகைப்படுத்தல் பொழிப்பறிக்கை ஒன்று 2014 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) நிதிப் பிரமாணம் 177(4) ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான சேகரிப்பிற்குரிய 54 பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் வலய அலுவலகங்களில் 27 அலுவலகங்களினால் 2014 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட வேண்டிய ‘‘எச்’’ எழுத்து கணக்கு 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமானக் குறியீட்டு இலக்கம் – 10-03-08-00 -- நொத்தாரிஸ்களுக்கு வருடாந்த உயர் நீதிமன்றச் சான்றிதழ்கள் வழங்கல் கட்டணம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திருத்திய வருமான மதிப்பீட்டின் பிரகாரம் நொத்தாரிஸ்களுக்கு வருடாந்த உயர் நீதிமன்ற சான்றிதழ் வழங்கல் கட்டணமாக ரூபா 20.00 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 17.59 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 2.41 மில்லியன் வருமானமொன்றை சேகரிப்பதற்கு தவறியிருந்தது.

(ii) 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 241/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கு பொழிப்பின் மூலம் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 15.58 மில்லியன் வருமானத்திற்காக எவ்வித செலவின அறிவித்தலொன்றும் திணைக்களத்தில் காணப்படவில்லை.

(iii) நீதி அமைச்சினால் இவ்வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 15.58 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும் பதிவாளர் நாயகத்தின் வருமானக் குறியீட்டிற்காக அதில் ரூபா 666,990 தொகை அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 14.92 மில்லியனான வருமானம் இவ்வருமான் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) திணைக்களத்தினால் நொத்தாரிஸ்கள் தொடர்பாக பேணப்பட்டிருந்த நொத்தாரிஸ் பெயர்பட்டியலில் இறப்பெய்துதல், உள்வருதல் மற்றும் வெளியேறுதல் போன்ற மாற்றங்கள் சீராக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

---

25401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,849,702 ஆக இருந்ததுடன் அம்மீதிகள் 6 மாதங்கள் முதல் 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்து வந்த போதிலும், அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஓய்வுபெற்ற 138 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 288,745 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 198,343 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 1986 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வருகின்றன.

(இ) 1990 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மரணித்த 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 116,586 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1991 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இருந்து வரும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 630,451 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1990 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இருந்து வரும் சேவை வறிதாக்கிச் சென்ற 24 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 437,394 ஆன கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 5.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 15.80 மில்லியனாக இருந்தது.

## 5.6 இணக்கமின்மைகள்

### பொருட்கள் சேவைகள் வழங்கப்படாமல் பணத்தை விடுவித்தல்

மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி இலங்கை மின்சார சபைக்கு ரூபா 8.52 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 09 ஆந் திகதி இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் பிரகாரம் 12 மாதங்களுக்குள் வழங்கலை மேற்கொள்ள வேண்டிய போதிலும், 2015 மார்ச் 17 ஆந் திகதி வரையிலும் மின்பிறப்பாக்கியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.4 (1) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்த தொகையில் 20 சதவீதமான ரூபா 1.70 மில்லியனை முற்பணமாகச் செலுத்த வேண்டிய போதிலும், அந்த எல்லையை விஞ்சி ரூபா 8.52 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 5.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 43 | 10 | 33 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 49 | 56 | - | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 2,162 | 1,702 | 460 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 462 | 408 | 54 | - |
| (v) | ஏனையோர் (ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | **2,716** | **2,177** | **547** | **08** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகை ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.